**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 1 COURT, NAMAKKAL.**

**STC.No.1637/2022**

**PW - 1**

| | | |
|---|---|---|
| **PW. 1 Cross continuation** | ஜோதிலிங்கம் த/பெ.கிருஷ்ணன் | 22.04.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the Date: 22.04.2025

**(எதிரி ஆஜர்)**

**விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 12.22 மணி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரி தரப்பில்) :-**

10) 11.07.2022 ம் தேதியில் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் மனுவில் எதிரி எவ்வளவு தொகை கொடுக்க வேண்டுமென சொல்லியுள்ளேன் என்றால் ரூ.10 லட்சம் ஆகும். மேற்படிரூ.10 லட்சம் காசோலை தொயைாகும், ரூ.5,40,000/- வட்டி தொகையாகவும் எதிரி தரவேண்டும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள மனுவிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிரமாண வாக்குமூலத்திலும் மேற்படி எதிரி ரவிச்சந்திரனுக்கு கைமாற்று கடனாக தான் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி நிலுவை வட்டியாக குறிப்பிடடப்பட்டுள்ள ரூ.5,40,000/- குறித்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள மனுவிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடாமல், தற்போது முன்னுக்கு பின் முரணாக மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் மனுவில் ஒரு மாதிரியும், இந்த வழக்கில் வேறுஒரு மாதிரியும் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, மூன்று வருட காலம் கைமாற்றுக்கடனாக கொடுத்தேன், அதன் பின்னர் கொடுக்காததால் வட்டியாக மூன்று வருட காலத்திற்கு ரூ.5,40,000/- போடப்பட்டது.

11) மேற்கூறியுள்ளவாறு எதிரி ரவிச்சந்திரன் ரூ.15,40,000/- எனக்கு தரவேண்டியது உண்மை என்றால் இந்த வழக்கு மனுவில் கூறியுள்ளபடி 02.06.2022 ம் தேதியில் மேற்படி நிலுவைத்தொகை நிலுவையில் உள்ளபோது எதிரி ரவிச்சந்திரன் கேட்டவுடன் அன்றை தேதியிலேயே எந்தவொரு ஆவணமும் பெறாமல் நான் ரூ.10 லட்சம் தொகை மேற்படி எதிரி ரவிச்சந்திரனுக்கு கைமாற்றுக்கடனாக கொடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**மறு விசாரணை – இல்லை.**

(விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 12.43 மணி )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையொப்பம் செய்தார்.

C NANDHINI

Digitally signed by C NANDHINI
Date: 2025.04.22 18:17:12 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.